1971 ஜூலை 17]

மேம்பாலத்திற்கு அனுமதி கிடைத்துவிட்டது என்று சொல்லப் படுகிறதே, அந்த மேம்பாலத்தைக் கட்ட அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, செஸ் நிதி ஒதுக்கப்பட்டதாக எனக்கு விவரம் இல்லை. அப்படி நிதி ஒதுக்கப்பட்டிருந்தால் இந்த ஆண்டே வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுப் பணித்துறையின் கீழ் உள்ள புறம்போக்கு நிலங்கள்

*293. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித்துறையில் உள்ள புறம்போக்கு நஞ்சை புஞ்சை நிலங்களைச் சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு நிரந்தரமாக ஜாரி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் உள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை, பொதுப்பணித் துறையின் விரிவான திட்டங்களுக்குப் போக எஞ்சியுள்ள நிலங்களை சாகுபடி செய்துவரும் விவசாயிகளுக்கே ஜாரி செய்து ஒப்படை செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தேவையில்லாத புறம்போக்கு நிலங்கள் விவசாயிகளுக்கு விவசாயத்திற்காக அளிக்கப்படுகிறது. இப்போது உரிமம் செய்து கொடுக்கும் வேலை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலே உள்ள ரோடு ஓரங்களிலே உள்ள ஏராளமான ஏழைகள் குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை யெல்லாம் அவர்களுக்குப் பட்டாச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரோடு ஓரங்களிலே போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் பொது மக்களுடைய ஆட்சேபணையில்லாமல் இருக்குமானால் ஏழை மக்களுக்குப் பட்டாச் செய்து கொடுப்பதற்கு ரெவின்யூ தரப்புக்கு அது மாற்றித் தரப்பட்டு ரெவின்யூ இலாக்கா மூலமாக பட்டா செய்து கொடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிற்குச் சொந்தமான ஏரி, புறம்போக்கு நிலங்கள் விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. நிலங்களை

[1971 ஜூலை 17

நீர்ப்பிடிப்பு இல்லாத நேரங்களில் பட்டா செய்து கொடுத்து விடுகிறார்கள். ஆனால் நீர்ப்பிடிப்பு ஏற்படும்பொழுது பயிர்களுக்காக ஏரிக் கரைகளை உடைத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக நீர்ப்பிடிப்பு இருந்தாலும், நீர்ப்பிடிப்பு இல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட நிலங்களை பட்டா செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏரிப் புறம்போக்கு ஆற்றோரப் புறம்போக்கு இவைகள் பட்டா செய்து கொடுக்கப் படுகின்றன. அப்படிச் செய்யும்பொழுது எந்தவிதமான கெடுதலும் இல்லாமல் இருந்தால்தான் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று பரவலாக இருக்கிறது. அப்படிச் செய்யக் கூடாது என்று அரசாங்கம் தேவையான உத்திரவுகளைப் பிறப்பித்திருக்கிறது.

திரு. வ. க. ராமராசன் : தலைவர் அவர்களே, பவானிசாகர் கால்வாய்ப் பகுதியில் 10 ஆயிரம் 15 ஆயிரம் ஏக்கர் பூமியுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்காமல் கூலி வேலை செய்கின்ற விவசாயிகளுக்கு ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். செல்வராஜ் : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையிலே இருக்கின்ற ஏரிகள் பல வருடங்களாகவே மேடிட்டுத் தண்ணீர் ஏறுமல் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே விவசாயிகள் பல வருடங்களாகப் பயிர் செய்து வருகிறார்கள். அந்த ஏரிகளுக்கு எந்த விதத்திலும் இடைஞ்சல் இல்லாத பகுதிகளிலே மட்டும் பட்டா செய்துகொடுப்பதற்கு பொதுப்பணித் துறைக்கு ரெவின்யூ துறை மாற்றிக்கொடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரெவின்யூ துறை பொதுப் பணித்துறைக்கு மாற்றிக் கொடுக்காது. பொதுப்பணித் துறைதான் ரெவின்யூத் துறைக்கு மாற்றிக் கொடுக்கிறது. சட்டத்திற்கு உட்பட்டு ஜாரி செய்யப்படக்கூடிய நிலங்களாக இருந்தால் அவற்றை பொதுப்பணித்துறை ரெவின்யூத் துறைக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

திரு. என். கணபதி : தலைவா அவர்களே, பாசன வாய்க்கால்களை ஒட்டியுள்ள பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் புறம்போக்கு நிலங்களைப் பெரும்பாலோர் ஆக்கிரமித்துக் கொண்டு நீர்ப்பாசனத்திற்கு இடைஞ்சல் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களையெல்லாம் நீக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : இது போன்ற அனுமதியில்லாத ஆக்கிரமிப்புகளை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, சாலை ஓரங்களிலே இருக்கிற புளிய மரங்களை வெட்டி, மொட்டையாக்கி விடுகிறார்கள். இதனால் பாதசாரிகளுக்கு நிழல் தராத நிலை ஏற்பட்டு, அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானமும் போய்விடுகிறது. எனவே, புளிய மரங்களை வெட்டாமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற நடவடிக்கைகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

Memorandum from Dhobies Association

* 296 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether this Government have received a memorandum from "The Tamil Nadu Salavai Thozilalar Munnetra Sangam" during the month of February 1970; and

(b) if so, the details thereof and the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) விவர அறிக்கையொன்று@ மன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : In the detailed statement, certain points had been clarified but certain things have not been clarified, such as the assurance given by this Government to the Dhobies that they would be given opportunity to get these basic materials sold through co-operatives at controlled rates. That is not being done and co-operatives are not functioning. May I know from the Hon. Minister whether loans are given for construction of dhobikhanas. It is mentioned here that Rs. 5 lakhs would be issued. The Hon. Minister said that he would himself visit Dhobikhanas and see how they are functioning. May I know whether steps have been taken by this Government to see that they are properly functioning, whether the grievances of dhobies such as power laundries, for which money was granted, whether all these things will be taken into consideration ? Will the Hon. Minister be pleased to tell us the steps taken in this direction ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் துறைகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் அரசாங்கம் தந்து வருகிறது என்பதை ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். அதிலே சில கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன. சலவைத் துறைகளைக் கட்டி அவற்றை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் தந்து விடுகிறோமே தவிர அவற்றை நிர்வகிப்பதில் அரசு எந்தவிதமான செலவையும் வைத்துக் கொள்ளவில்லை. இயந்திரச் சலவை அமைப்பதில் சென்னையில் ஒன்று ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டு அதற்குக் கட்டடம் போன்ற வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதற்காக கூட்டுறவு சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு நிலம் கூட 10

@ 101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.